# சைவசித்தாந்தச் சிந்தனைப் பள்ளிகள்: ஞானமும் தீக்கையும்

**பொன்னுத்துரை சந்திரசேகரம்**

*சைவசித்தாந்தத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

segaram@univ.jfn.ac.lk

**அறிமுகம்**

பரத கண்டத்தில் தோன்றிய பல்வேறு சிந்தனைப் பள்ளிகளில் (Schools of Thoughts) குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைவது சைவசித்தாந்தம். சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், அத்வைதம் போன்ற சிந்தனைப் பள்ளிகளிலிருந்து வேறுபட்ட வகையில் வேதத்தைக் காட்டிலும் சிவாகமங்களுக்கு முதன்மை வழங்குகின்ற சமயச்சார்புடைய சிந்தனைப்பள்ளியாக சைவசித்தாந்தம் நிலைநிறுத்தப்படுகின்றது. குறிப்பாக விசிட்டாத்வைதம், துவைதம் போன்ற மெய்யியல்கள் நாராயணனைப் பரம்பொருளாகக் கொள்கின்றபோது, சிவபரத்துவத்தை நிறுவுகின்ற மெய்யியலாக சைவசித்தாந்தம் உள்ளது. இச்சிந்தனைப்பள்ளியானது திருக்கைலாசத்தை மையமாகக்கொண்டு தோன்றி வளர்ந்தது. சைவத்தின் பிரிவுகளாகவுள்ள காஷ்மீர சைவம், வீரசைவம், பாசுபதம், சிவாத்துவிதம், சிவசமவாதம் போன்றவை சைவசித்தாந்த மெய்யியலையே முடிவாகக்கொண்டவை. எனினும் பௌத்தம், அத்வைதம் போன்ற மெய்யியல்களின் செல்வாக்கினால் இச்சமயப்பிரிவுகள் உயிர்களுக்கும், இறைவனுக்குமான சம்பந்தம், முத்திநிலையில் உயிர்களின் நிலை போன்றவற்றை விளக்குவதில் வேறுபடுகின்றன. அதேநேரம் சைவசித்தாந்த சிந்தனைக்கு மூலமாக இருக்கின்ற ஆகமக் கருத்தியல்களின் முடிவான கொள்கை எது என்பதை விளக்குவதில் வேறுபடும் சிந்தனைகள் பலவும் சைவசித்தாந்த சிந்தனைப்பள்ளிகளாக வளர்ச்சியடைந்தன. இச்சிந்தனைப் பள்ளிகளில் அகோரசிவாசாரியார், ஞானப்பிரகாசர் போன்றோர்களின் மரபில் வந்த சிந்தனைப்பள்ளிகள் முக்கியமானது. இச்சிந்தனைப்பள்ளிகளில் முதன்மைப்படுத்தப்படுகின்ற தீக்கையினையும், மெய்கண்டார் சிந்தனைப் பள்ளியில் முதன்மைப்படுத்தப்படுகின்ற பதிஞானம் எனப்படுகின்ற சிவஞானத்தினையும் ஒப்பிட்டு ஆராய்கின்றபோது, இச்சிந்தனைப்பள்ளிகளுக்கிடையிலான தொடர்பினை அறிந்துகொள்ளமுடியும். ஞானம் என்பதைத் தமிழில் மெய்யுணர்தல் என்று கூறலாம். மெய்யுணர்தல் என்பது பொருளல்லாதவற்றை பொருளென்ற உணராது நிலைத்த மெய்மையை அறிதல். ஐயத்தில் நின்றும் நீங்கித் தெளிவான மெய்மையை அறிதல். இன்னொரு வகையில் கூறினால் அசத்து எனப்படும் மாறும் தன்மையுடைய உலகம் பொய்யென்பதை உள்ளத்தின் கண் ஆராயும்போது நிலைத்த மெய்மை வெளிப்படும். தீக்கை என்பது பசுத்தன்மை நீக்குதலும் சிவத்தன்மையை அளித்தலும் அல்லது மும்மலத்தைக் கெடுத்தலும் சிவஞானத்தைக் கொடுத்தலும் எனலாம். இது ஒரு புறநிலைச் சடங்கு போன்றதாக அமையினும் இறுதிநிலையில் ஞானமும் தீக்கையும் ஒன்றாகவே அமைகின்றது. இன்னொரு வகையில் கூறினால் இந்திய மெய்யியலில் ஞானம் எனப்படுவது அங்கமாக அமைய, தீக்கை அதற்கு அங்கியாக அல்லது தீக்கை பிரதானமாக அமைந்துவிடுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

சைவாகமங்களில், உயிர்களின் அறியாமைக்குக் காரணமாகிய ஆணவமல நீக்கத்திற்கு ஞானம், தீக்கை என்ற இரண்டு விடயங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் ஞானம் முதன்மையா?, தீக்கை முதன்மையா? என்ற ஆராய்ச்சி இரத்தினத்திரயம் போன்ற அஷ்டப்பிரகரண நூல்களிற்கு உரை எழுதிய அகோரசிவாசாரியார் போன்றோர் எடுத்துக்காட்டியுள்ளனர். ஈழத்து அறிஞரான ஞானப்பிரகாசமுனிவர், சத்தியோஜோதி சிவாசாரியார், நாராயணகண்டர், அகோர சிவாசாரியார், மறைஞானதேசிகர் முதலிய ஆகமப்புலமையாளர்களின் கருத்துக்களின் பின்னணியில் பௌஷ்கராகம விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாணதீபிகை, சிவஞானபோத விருத்தி, பிராசாததீபிகை, அஞ்ஞான விமோசனம், சிவயோகசாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதிமான்மிய சங்கிரகம், மகாவாக்கிய சங்கிரகம், சர்வஞானோத்தரம், தேவிகாலோத்தரம், சுருதி சூக்திமாலை மற்றும் சிவஞானசித்தியார் உரை போன்ற நூல்களின் வாயிலாகச் தீக்கை பிரதானமானது என்ற சிந்தனைப் பள்ளியை விளக்கியுள்ளனர். சிவஞானமுனிவர் சிவஞானசித்தியாார் உரையிலும் சிவஞான பாடியத்திலும் அக்கருத்தை மறுத்து ஞானம் தான் பிரதானம் தீக்கை பிரதானமன்று என்றார். சிவஞானசித்தியாருக்கு உரை எழுதிய ஈழத்தவரான திருவிளங்கமும் ஞானம் பிரதானம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

**தீக்கை பிரதானம்**

தீக்கைதான் பிரதானம் என்ற கருத்தை நோக்கும்போது, மலம் கண்ணிற் படலம் போல் திரவியமாதலால் ஞானத்தால் நீங்குவதன்று, வைத்தியன் கருவியைக் கொண்டு கண்ணிற் படலத்தை நீக்குவது போலக் குருவாகிய சிவபெருமான் தீக்கை என்கின்ற கருவியினால் மலத்தை நீங்குகின்றார். எனவே தீக்கை அங்கி எனவும், ஞானம் அங்கமெனவும் கூறப்படும். மேலும் தீக்கையே சுதந்திரம் எனப்படும். இதனால் முத்தியடைய விரும்பும் சாதகனுக்கு தீக்கை பிரதானம் என்றும் தேசிகன் அல்லது குருவிற்கு ஞானம் பிரதானம் என்றும் சொல்லப்படுகிறது. இக்கருத்து நிலையை ஞானப்பிரகாசர் கீழ்வருமாறு விளக்குகின்றார். “சத்தியோ நிர்வாண தீட்சையிலே, தேசிகனுக்கன்றிச் சாதகனுக்கு ஞானம் வேண்டுவதில்லை ஆதலாற் தேசிகனுக்கு ஞானம் பிரதானம் சாதகனுக்கு தீக்கை பிரதானமென்று சுவாயம்புவ வியாக்கியானத்திற் சத்தியோஜ்யோதி பாதங்களால் விஸ்தரிக்கப்பட்டிருகையால் ஞானந் தீட்சா கன்மத்துக் அங்கம் தீக்சா கன்மம் அங்கியென்பதும் மலந்திரவியமாதலால் நேத்திரபடலம் போல ஞானகோடிகளாலும் போகாதென்பதும்...” (நடராஜஐயர், 1888, ப 15, 16). “மோட்ச காரியமுற்று மொத்துச் சொல்லுஞ் சொல்லிய சிவ சத்திலக்கண தீக்கையாற்றானே மோட்ச மென்று சுவதந்திர தீக்கை சிற்கண்மத்தால் மோட்சம் சுவதந்திர மல்லாத ஞான கோடிகள் தீக்சாங்கங்களன்றிச் சுவதந்திரங்களாய்ச் சூழ்ந்தாலு மோட்சமில்லையாம்: ஆதலாற் சொல்லிய சிவ தீக்கை சத்தி சங்கற்ப சிற்கன்மத்தாற்றானே மோட்சமென்று சித்தாந்தம் (நடராஜஐயர், 1888, ப 238). இரௌரவ சூத்திரக்காரர் சிவசக்தியினால் விளக்கப்பட்ட நின்மலமான ஞானசக்தியைக் கொண்டே தீக்கை பெற்றவரால் சிவன் தியானஞ் செய்யப்படுவரென்று கூறியுள்ளார் (ஸத்யோஜ்யோதி சிவாசாரியார், 2000, ப 46).

**ஞானம் பிரதானம்**

சிவஞானமுனிவர் சிவஞான மாபாடிய சிறப்புப்பாயிரத்தில் வீடுபேற்றுக்கு ஞானம் பிரதானம் என்ற கருத்தை வலியுறுத்தி தீக்கை பிரதானம் என்று கூறும் ஞானப்பிரகாசர் கருத்தை மறுத்துரைத்திருக்கின்றார். முனிவரது பிரதான கருத்துநிலையைக் கீழ்வருமாறு நோக்கலாம் (சா.சரவணன், 2018, ப 45,46).

பௌஷ்கரத்தில் "ஆசிரியத் தன்மையின் அதிகாரமும், மல நீக்கமும், சிவ விளக்கமும் பெறற்பாலனவாகலான், ஞானபாதத்தையே எமக்கு தெரித்தருளுக" என முனிவர் வேண்டிக் கேட்கின்ற வசனங்களுக்கு அவ்வாறே பொருள் உரைக்க வேண்டும் வேறு பொருள் கூறமுடியாது. மதங்கம், கந்தகாலோத்தரம், சிவதருமோத்தரம், தேவிகாலோத்தரம், சருவஞ்ஞானோத்தரம், ஞானதிலகம் முதலிய ஆகமங்கள் மலநீக்கமும் சிவவிளக்கமும் ஞானத்தால் பெறப்படுவன என்றுரைக்கின்றன.

தீக்கை என்னும் சொல்லுக்குப் பொருள் மலத்தைக் கெடுத்து, ஞானத்தைக் கொடுத்தல் என்றே ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது. பிறக்கும் போதே குருடனாகப் பிறந்த ஒருவனது விளியை மறைத்திருக்கும் படலத்தைச் சிறந்த மருத்துவன் ஒருவன் நீக்கிவிட்டான். அப்போது அக்குருடனுக்குக் கண் பார்வை தோன்றும் என்பது உண்மை. ஆனால் காண்கின்ற பொருள்களை இது இன்னபொருள் என்று அவனாலே அறிந்துகொள்ளமுடியாது. மற்றொருவன் அவனுக்குப் பொருள்களை ஒவ்வொன்றாகக் காட்டி இவை இன்னின்ன என்று கற்பித்த பிறகே புதிதாகப் பார்வை பெற்றவன் பொருள்களை அறிவான். எனவே தீக்கை என்பது பிறவிக் குருடனுக்கு கண்ணின் படலத்தை நீக்குவது போன்றது. ஞானம் என்பது கண்பார்வை பெற்றபின் பொருள்களின் இயல்புகளை விளக்குவது போன்றது.

ஒளியால் அன்றி இருள் நீங்காதவாறுபோல ஆணவமும் ஞானத்தால் அன்றித் தீக்கையால் மட்டும் நீங்காது. தீக்கையின்போது செய்யப்படும் அத்துவா சுத்தியினால் அத்துவவில் நிரம்பி இருக்கும் சஞ்சித கன்மம் மாத்திரம் நீங்கும் எனவும் அதனாலே ஞானத்தைப் பெறுவதற்குத் தகுதி உடையவன் ஆகின்றான். ஆணவமலமுடைய விஞ்ஞானகலர்க்கு முதல்வன் அவர்களின் உயிருக்கு உயிராய் நின்று தனது தீக்கை என்னும் இயற்கைப் பெயருடைய கிரியாசக்தியின் வலிமையால் தனது உளக்குறிப்பின் வண்ணம் ஆணவ மலத்தை நீக்குவான். விஞ்ஞானகலர்க்கு இறைவன் செய்யும் தீக்கை, ஔத்திரி தீக்கை ஆகிய ஓமம் வளர்த்து இயற்றும் தீக்கை அன்று. கண்ணில் படலம் மருத்துவன் செய்யும் தொழிலான் அல்லாது நீங்காதவாறுபோல ஆன்மாவின் கண்ணதாகிய மலமும் குரவன் செய்யும் ஔத்திரி தீக்கையாலன்றி நீங்குதல் கூடாது என்பது பொருத்தமற்றது. முதல்வனது கிரியாசக்தி சங்கற்பம் ஒன்றே மல நீக்கத்திற்குக் காரணம். கிரியா சக்தியும் ஞானசக்தியும் தம்முள் வேறன்று.

**ஆய்வின் நோக்கம்**

சைவசித்தாந்த சிந்தனை மரபில் இரண்டு பள்ளிகள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று மெய்கண்டாரது சிந்தனைப்பள்ளி மற்றையது சத்தியோஜோதி சிவாசாரியார், நாராயணகண்டர், அகோர சிவாசாரியார், மறைஞானதேசிகர், ஞானப்பிரகாசமுனிவர் முதலிய ஆகமப் புலமையாளர்களினால் வளர்க்கப்பட்ட சிந்தனைப் பள்ளி. இவ்விரு சிந்தனைப்பள்ளிகளிலும் சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாட்டு நிலைகளில் வேறுபாடு காணப்படவில்லை. ஆயினும் சைவசித்தாந்தக் கோட்பாட்டு முடிவுகளில் அதிக வேறுபாடுடைவையாக இருக்கின்ற அதேநேரம் தத்தம் கோட்பாடுகள் தாம் சைவசித்தாந்தம் என்று நிறுவதில் முனைப்புக் காட்டி, ஒன்றை ஒன்று கண்டித்தும் மறுத்தும் வந்துள்ளன. குறிப்பாக ஞானம், தீக்கை, முத்திநிலையில் ஆன்மா பஞ்ச கிருத்தியம் செய்தல் முதலிய சிந்தனைகளில் இம்மாறுபாடுகளைக் காணலாம். இவ்வகையில் சைவசித்தாந்த சிந்தனை மரபில் முத்தியடைவதற்கு ஞானம் பிரதானமா? அல்லது

தீக்கை பிரதானமா? என்ற கருத்து வேறுபாட்டை ஆய்வுப் பிரச்சினையாகவும், தீக்கை பிரதானம் என்பதை ஆய்வின் கருதுகோளாகவும் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வு மூலங்களும் ஆய்வு முறையியல்களும்**

இந்த ஆய்வானது சைவசித்தாந்தத்தின் பிரமாண நூல்களான ஆகமங்களையும், மெய்கண்ட சாத்திரங்களையும் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டுள்ளது. குறிப்பாக பௌஷ்கரம், மிருகேந்திரம், கிரணம் போன்ற ஆகமங்கள் மற்றும் மெய்கண்டாரின் சிவஞான போதம், அதன் வழிநூல்களாகிய அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞான சித்தியார் மற்றும் உமாபதி சிவாச்சாரியாரின் சிவப்பிரகாசம் உள்ளிட்ட மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றது. தீக்கை பிரதானம் என்று வலியுறுத்தும் ஞானப்பிரகாசரது சிவஞானசித்தியார் உரையையும், ஞானம் பிரதானம் என்பதை வலியுறுத்தும் சிவஞானமுனிவரது சிவஞானபாடியம், சிவசமவாத உரை மறுப்பு என்பன மற்றும் இவ்விடயம் சம்பந்தமாக வெளிவந்த ஆய்வுநூல்கள், கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த ஆய்வில், சைவசித்தாந்தத்தின் மெய்யியல் பரிணாமத்தையும், ஞானம் மற்றும் தீக்கை கோட்பாடுகள் இடையேயான சிக்கலான உறவையும் பகுப்பாய்வு செய்வதால், வரலாற்று–விமர்சன ஆய்வு அணுகுமுறை பின்பற்றப்படுகின்ற அதேநேரம் ஆகம மெய்யியல் மரபில் வளர்ச்சியடைந்த சைவசித்தாந்தப் பள்ளிகளில் இருந்து மெய்கண்டாரின் மெய்யியல் பள்ளி வேறுபடுகின்றது என்பதும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. மேலும், இவ்விரு சிந்தனைப் பள்ளிகளுக்கும் இடையேயான முக்திக்குரிய உபாயங்களின் அணுகுமுறையைத் தெளிவுபடுத்த, ஒப்பீட்டு ஆய்வு முதன்மையாகப் பயன்படுத்தப்படுகின்றது. பிரமாண நூல்களில் காணப்படும் தீக்கை தொடர்பான நேரடி விளக்கங்கள் திரட்டப்பட்டு, அதன் மெய்யியல் இலக்கு குறித்த சித்தாந்திகளின் விளக்கங்கள் உரைப்பகுப்பாய்வு முறையில் ஆராயப்படும். ஆகமங்கள் கிரியையை நேரடி மோட்ச வழிமுறையாக வலியுறுத்துகிறதா? அல்லது ஞானத்தை அடைவதற்கான 'நிமித்தமாக' மட்டுமே வலியுறுத்துகிறதா? என்ற மைய வினா, சாத்திரங்களின் அடிப்படையில் தர்க்க ரீதியாக, மெய்யியல் ரீதியான ஒப்பிடல் முறையில் ஆராயப்படுகிறது. ஞானம் மற்றும் தீக்கை ஆகியவை எவ்வாறு ஒன்றோடொன்று அத்துவிதமாகப் பிணைகின்றன அதாவது, ஞானம், தீக்கை என்ற இரண்டுமே முக்திக்கு அடிப்படை என்றாலும், தீக்கை தான் பிரதானம், ஞானம் அங்கம் என்ற கருதுகோளை நிறுவ, ஆய்வுக்குரிய கருத்துகள் விமர்சனத் தொகுப்பாகத் தொகுக்கப்பட்டு முடிவு பெறப்படும்.

**ஆய்வு முடிவுகள்**

பௌஷ்கரம் முதலிய ஆகமங்களில் முனிவர் முதலியோர் வேண்டுவது பரஞானத்தைத் தருவதாகிய சிவஞானத்தை என்பது "மருவியிடு முயர்ஞான மிரண்டா மாறா, மலமகல வகலாத மன்னுபோதத், திருவருளொன் றென்றுறதனைத் தெளிய வோதுஞ், சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே"(10) சிவப்பிரகாசம் செய்யுளால் பெறப்படும். அங்கு உமாபதி சிவாச்சாரியார் சிவஞானமானது வீடு பேற்றுக்குச் சிறந்த சாதனம் எனக் கூறி அது பரஞானம், அபரஞானம் என இருவகை எனக்காட்டி அபரஞானமானது அத்திருவருளைப் பெறுவதற்குரிய நெறியை மயக்கமற உணர்த்தும் சிவாகமங்கள் என்றும், பரஞானமானது ஆன்மாவின் மலவிருளை நீக்கும் திருவருள் என்றும் கூறினார். எனவே ஞானத்தில் கேட்டல், தெளிதல், சிந்திதல், நிட்டை எனக் கூறப்படும் நிலையில் நிற்கும் ஆன்மாவிற்கு இருவினையொப்பு மாத்திரமன்றி தீட்சாகன்மத்தினால் சத்திநிபாதம்,

மலபரிபாகம் என்பன ஏற்பட வேண்டும். எனவே ஞானமே வீட்டுநெறியை பயப்பிப்பது என்பது பரஞானம் எனப்படும் திருவருளாகிய சத்திசங்கற்பம் ஏற்பட்ட மாத்திரத்தே நிகழ்வது எனவே தீட்சையை ஞானம் என்றும், அங்கி என்ற ஞானப்பிரகாசர் முதலியோரது கருத்து தவறுடையது எனக் கருதமுடியாது.

ஞானதிலகம் என்ற ஆகமம் “இந்த ஆன்மா, மலம் பக்குவமுற்றதால் முறையாக சக்திநிபாதம் நிகழ, தீக்கையால் வீடுபேற்றை அடைகின்றன. ஞானம் முதலிய உபாயங்களால் அதனை அடையமுடியாது. ஞானம் முதலிய உபாயங்கள் தீக்கைக்கு அங்கமாகச் சொல்லப்படுவதால் என்றறிக எனவும், சிவபெருமானைக் குறித்துச் செய்யும் யோகம் முதலியவைகளும் சிவதீக்கை அன்றி ஏற்படாமையாலும், மலம் திரவியமாக இருப்பதால் கண்ணிற்குப் படலம் போல ஞானமாத்திரத்தால் விலகாமையாலும், அது கண் மருத்துவருடைய செயலால் நீங்குவது போல, தீக்கை எனப்படும் ஈச்வர வியாபாரத்தாலேயே ஆணவமல நிவர்த்தி ஏற்படும் என்றும் குறிப்பிடுகின்றது (சுந்தரேச சிவாசாரியார், 1976, ப 267). ஸ்ரீமத் பராக்கியம் என்ற ஆகமமும் “ஞானம் முதலிய மார்க்கங்களுக்கு தீக்கைதான் பயனாகும். அவை தீக்கைக்கு அங்கங்களாகக் கூறப்பட்டுள்ளன. பூசை, ஹோமம் முதலிய கிரியையும் அதற்கு அங்கமாகும். உறுதியுடன் திருநீறணிதல் விரதம் அனுஷ்டித்தல் முதலியவை சரியை எனப்படும். இதுவும் தீக்கையின் அங்கமாகும். பிரத்தியாஹாரம், தாரணை, தியானம் முதலிய யோகமும் தீக்கையின் அங்கங்களாகும். தீக்கையால் பிராகிருத சரீரம் நசித்த பொழுது மோட்சத்தை அடைவான். இவை யாவும் அங்கங்களும், தீக்கை அங்கியுமாகும்” என்று கூறுகின்றது (சுந்தரேச சிவாசாரியார், 288). ஞானத்தின் இலக்கணத்தைக் காலோத்தர சூத்திரம்,

விச்வஸ்யாநேகருபஸ்ய ஜ்ஞாநமேகம் சிவாத்மகம்! வியாபகம் விமலம் சாந்தகம் புக்திமுக்தீதி யேந தத் !! (சூ. 64) பதினான்கு உலகத்திலுமுள்ள சீவனுக்கு எந்த ஞானத்தால் போகம் மோட்சம் ஏற்படுகின்றனவோ. அந்த ஞானம் சிவசக்தியென்னும் பரஞானமேயாகும், அதுவே சிறந்தது: வியாபகமானது: நின்மலமானது: விருப்பு வெறுப்பற்றது என்பது. (சுந்தரேச சிவாசாரியார், 267) பௌஷ்கரம் “சிவபெருமானிடம் ஸமவாயமாக உள்ள சக்தியே ஞானவடிவாக விளங்குகிறது. அது மலசக்திக்குப் பகையாக உள்ளது. அச்சக்தியே ஞானம் என்று கூறப்படுகிறது. அபர ஞானமாகிய சாத்திரம் அச்சக்தியைத் தெரிவிக்கிறது” என்று கூறுவது காண்க. (சுந்தரேச சிவாசாரியார், 280) மற்றைய மதங்களில் கூறப்படும் ஞானம் முதலியவை பந்தத்தினின்று விடுபடுவதற்குக் காரணமாகா என்பது பொருளாகும். அதாவது – பசுமதத்தில் சொல்லப்பட்டதான ஞானம் முதலிய உபாயங்கள் பசுஞானத்தைத் தருவதாலும், பாசரூபமாக இருத்தலாலும் அவை மோட்சத்தைக் கொடுப்பன ஆகமாட்டா என்பது . அவ்விடத்திலேயே, “பாச ஞானமும் பசுஞானமும் முத்திக்குக் காரணமாக மாட்டா: எவ்வகையிலும் பதிஞானமே முத்திக்குக் காரணமாகும் என்று கூறியுள்ளது அறிக (சுந்தரேச சிவாசாரியார், 286, 287).

ஆகம மெய்யியல் சிந்தனைப் பள்ளிகள் மோட்சத்தை அடைவதற்கு தீக்கை பிரதானம் என்பதை வலியுறுத்தும்போது மெய்கண்டார் சிந்தனைப் பள்ளிகள் ஞானம் பிரதானம் என்கின்றது. இங்கு ஞானம் மற்றும் தீக்கை பற்றிய வரையறைகளில் உள்ள வேறுபாடே இத்தகைய முரண்பாட்டுக்கு காரணம் எனலாம். பாரத தேசத்தின் பெரும்பாலான சிந்தனைப் பள்ளிகள் உயிர்கள் மோட்சத்தை அடைவதற்கு ஞானமே திறவுகோல் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளன. எனினும் நான் பிரமம் என்று கருதுவதே ஞானம் என்றும், பிரகிருதியிலிருந்து நான் வேறு என்பதை அறிவிப்பதே

ஞானம் என்றும் ஞானத்தின் வரையறைகள் வேறுபடும். எனவே பாரத தேச மெய்யியல்களில் பேசப்படும் ஞானத்தினாலே மோட்சத்தை அடையமுடியாது, தீக்கையினாலே மோட்சம் என்ற கருத்து சிவாகமங்களில் பரவலாக இடம்பெறுகின்றது. ஞானம் பர, அபரம் என்று இருவகை ஞானங்களைச் சைவசித்தாந்தம் மூவகை ஞானங்களாக வரையறுத்துள்ளது. அது பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்பதாகும். முதல் இருவகை ஞானங்களும் அபரஞானம் எனப்படும். இந்த அபரஞானம் எனப்படும் வேதம் உட்பட்ட சாத்திரஞானங்களால் வருகின்ற அறிவும், நான் பிரமம் என்று கருதுதலுமாகிய ஞானங்கள் மோட்சத்தை அடைவிக்காது. சிவசக்தி சங்கற்பம் எனப்படும் தீக்கை அல்லது பதிஞானத்தினாலேயே மோட்சம் ஏற்படுகின்றது என்பது சகலாகமசித்தாந்தம் என்பது நன்கு புலப்படுகின்றது. தீக்கை வேறு, பதிஞானம் வேறு என்று கொண்டவர்கள் தீக்கை மலத்தைக்கெடுத்தலும் ஞானம் மோட்சத்தை அளித்தலும் என்றும் வேறுவேறாகக் கொள்வர். எனினும் தீக்கை நிகழ்தலும் பதிஞானம் நிகழ்தலும் வேறுவேறானவை அல்ல இரண்டும் ஒன்றே. மேலும் சரியை முதலியவற்றில் இறுதியான கேட்டல் முதலிய ஞானங்கள் தீக்கைக்கு அங்கமாக அமைய தீக்கை அங்கியாக அமைகின்றது. இதனால் ஆகம மரபை அடிப்படையாகக்கொண்ட சைவசித்தாந்த சிந்தனைப்பள்ளியில் கூறப்படும் தீட்சை பிரதானம் என்ற கருத்து வலுவுடையது எனலாம்.

**நிறைவுரை**

ஆகம மெய்யியல் மரபில் வந்த சிந்தனைப் பள்ளிகளுக்கும், மெய்கண்டார் மரபில் வந்த சிந்தனைப் பள்ளிகளுக்குமிடையிலான கருத்தியல் வேறுபாடுகள் சிலவற்றுள், கூர்மைப்படுத்தப்படாத அதேநேரம் சித்தாந்த மெய்யியலின் அதிஉயர் புலமைத்துவமான விடயமாக உள்ள ஞானம் மற்றும் தீக்கை பற்றிய கருத்துகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மெய்கண்டார் சிந்தனைப்பள்ளி சார்பில் ஞானம் பிரதானம் என்ற கருத்தை சிவஞானமுனிவர் நோக்கில் தரப்பட்டுள்ளது. அதேநேரம் ஆகம சிந்தனைப்பள்ளி சார்பில் தீக்கை பிரதானமானது என்ற கருத்தை ஞானப்பிரகாசர் கருத்து வாயிலாகவும் ஆகமச்சான்றுகள் வாயிலாகவும் எடுத்துக்காட்டப்பட்டது. சிவஞானமுனிவர் ஞானமும் தீக்கையும் ஒன்றே என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. சிவஞானசித்தியார் முதலிய நூல்கள் ஞானத்தால் வீடு என்கின்றபோது சரியை, கிரியை, யோகம் முதலியவற்றால் வீட்டுநெறி அடையமுடியாது என்ற கருத்துப் பற்றியே அவ்வாறு கூறின. ஞானநெறியில் நிற்பவருக்கும் தீக்கை அல்லது பரஞானம் தான் முத்தி எனச் சிவாகம, சித்தாந்த சாத்திரங்கள் வலியுறுத்துகின்றமை குறிப்பிடற்குரியது. இங்கு தீக்கையும் ஞானமும் ஒருவகையில் இணைகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இலங்கையில் சைவசித்தாந்த மரபின் மூலவராக ஞானப்பிரகாசர் உள்ளவகையில் தீக்கை பிரதானம் என்ற கருத்தை ஆறுமுகநாவலர் போன்றோர் முன்னெடுத்துள்ளவகையில் இலங்கைச் சித்தாந்த மரபு மெய்கண்டார் சிந்தனைப்பள்ளியை நிராகரிக்காத அதேநேரம் ஆகம மெய்யியல் சார்பில் உருவான சிந்தனைப்பள்ளியையே பின்பற்றி வருகின்றது எனலாம்.

**துணை நூற்பட்டியல்**

ஆறுமுகநாவலர். (2013). *பெரியபுராணசூசனம்.* கா. திருஞானசம்பந்தன் (PDF), நூலகத்திட்டம். கொழும்பு.

கந்தையா, மு. (1994). *சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி*. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், அருணைவடிவேலு முதலியார், சி. (மொழி.). (1986). *கிரணாகமம் ஞானபாதம்.* அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்.

சரவணன், சா. (பதி.). (2018). *சிவஞான மாபாடியம்.* சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை.

சுந்தரேச சிவாசாரியார், ஏ. (பதி.). (1976). *ஸதரத்தின ஸங்கிரஹம்.* சரஸ்வதி மகால் நூலகம்.

சுந்தரேசம் பிள்ளை, மு. (பதி.). (1982). *இரத்தினத்திரயம்.* திருவாவடுதுறை ஆதீனம்.

நடராஜஐயர். (பதி.). (1888). *சிவஞானசித்தியார் சுபக்கம்.* ஞானப்பிரகாச முனிவர் வியாக்கியானம். நடராஜ யந்திரசாலை.

மகாலிங்கம், பா. (பதி.). (1985). *ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகள் அருளிச் செய்த உரைச் செய்யுள்.* திருவாவடுதுறை ஆதீனம்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை, த. ச. (பதி.). (1965). *சிவஞானசித்தியார் சுபக்கம்-ஸ்ரீசிவாக்கிரயோகிகள் உரையுடன்.* திருவாவடு துறை ஆதீனம்.

ஷண்முகசுந்தர முதலியார், கொ. (பதி.). (1890). *பௌஷ்கராகமம் த்ரதீடீகை.* சிவஞானபோத யந்திரசாலை.

ஷண்முகசுந்தர முதலியார், கொ. (பதி.). (1890). *மிருகேந்த்ர சவ்யாக்யாநம்.* சிவஞானபோத யந்திரசாலை.